From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 4/14

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : களஞ்சியம் | Father/Husband Name | : சீனிமுகமது |
| Age | : | Calling | : |
| Date | : 19.11.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 19 day of 11.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**2ம் எதிரி ஆஜர், 1ம் எதிரி ஆஜர் இல்லை, மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் கொடுக்கம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. எதிரி ரத்தினசபாபதியை தெரியாது. அசா1 யை தெரியும், அசா 1ன் மகள் ஜெயமணியை தெரியும். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பில் அசா4 ஆ பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிகோரப்பட்டு அனுமதிக்கப்பட்டு அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

அசா1 தனுஸ்கோடிக்கு ஜெயமணியின் வீட்டுக்காரர் வெளிநாட்டிலிருந்து சுமார் 20 பவுன் நகை அனுப்பி அதை அசா1 தனது பாதுகாப்பில் வைத்திருந்ததாகவும், நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த அய்யங்கோவில், தமிழ் செல்வம், மற்றும் சாட்சி வீரசேகர் ஆகியோர் நிலம் சம்மந்தமாக தனுஸ்கோடி வீட்டில் பேசிக்கொண்டிருந்தனர் என்றும், அப்போது எங்களுக்கு அறிமுகமாக எதிரி ரத்தினசபாபதி என்பவர்

அவருடைய தாயாருக்கு மருத்துவ செலவிற்காக தனுஸ்கோடியிடம் பணம் கேட்டார் என்றும், அதற்கு தனுஸ் கோடி முதலில் மறுத்துவிட்டு பின்னர் அவரிடமிருந்து 14, 1/4 பவுன் தங்க நகையை எதிரி ரத்தினசபாபதியிடம் நம்பி கொடுத்தார் என்றும், எதிரி ரத்தினசபாபதி ஒரு வருடத்திற்குள் திருப்பி தருவேன் என்று சொல்லி வாங்கிவிட்டு பின்பு அசா1 நகையை திருப்பி கேட்டதற்கு தராமல் 2ம் எதிரி வெங்கடேஷ்வரியிடம் கொடுத்துள்ளேன் என்று சொன்னார் என்றும், ஒரு வாரம் கழித்து வாங்கி கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு திருப்பி கேட்டபோது 1வது எதிரி வெங்கடேசனிடம் அழைத்து சென்று நகையை கேட்டதற்கு 2ம் எதிரி 1ம் எதிரியிடம் வாங்கிய 10, 1/4 பவுன் நகைளை முத்தூட் பைனான்ஸ்ல் அடகு வைத்துவிட்டதாகவும், அதை திருப்பி தருகிறேன் என்று 2ம் எதிரி சொன்னார் என்றும், இதுசம்மந்தமாக 1வது எதிரி 2ம் எதிரி மீது வழக்கு கொடுத்து அதன்மூலம் நீதிமன்றம் மூலம் மேலூர் காவல் நிலைய குற்ற எண் 790/2011 இதச பிரிவு 420 வழக்கு பதிவு செய்யப்பட்டதாக சொல்லி தெரிந்துகொண்டேன் என்றும், அதன்பேரில் காவல் ஆய்வாளர் முத்தூட் பைனான்ஸ்ற்கு அழைத்து சென்று மேலாளரிடம் நகையை வெங்கடேஸ்வரி கேட்டால் கொடுத்துவிடாதிர்கள் என்று சொன்னதாகவும், மறுநாள் காலையில் நானும், 1ம் எதிரியும், பணத்தை கொண்டு வந்து அடகு ரசீதுடன் காவல் நிலையத்தில் காத்திருந்தோம் என்றும், 2ம் எதிரி முத்தூட் பைனான்ஸ் ரசீதை தொலைத்துவிட்டதாக சொல்லி அதன்பேரில் அனைவரும் தெரிந்துகொண்டு முத்தூட் பைனான்ஸ் சென்றோம், அங்கு உறுதி பத்திரம் எழுதி கொடுத்து 2ம் எதிரி வெங்கடேஸ்வரி நகைகை பெற்றுக்கொண்டாகள் என்று முத்தூட்பைனான்ஸ், நகை சம்மந்தமாக அசா1 மேலூர் காவல் நிலையத்தில் 18.07.2011ம் தேதி புகார் கொடுத்தார்

என்று கேள்விபட்டேன் என்று போலீசார் விசாரைணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை,**